# முதலாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ் மொழியும் இலக்கியமும்

307

தரம்- 6

நேரம்-2.00 மணித்தியாலம்

## பகுதி - I

01) சரியான விடையின் கீழ் கீறிடுக.

01. "கூறுவது எல்லோருக்கும் எளிது" இங்கு எளிது என்பதன் ஒத்த கருத்து?
1) கடினம் 2) சிரமம் 3) இலகு 4) கடமை

02. "எலி அளைக்குள் சென்றது" இங்கு அளை என்பது?
1) அறை 2) புற்று 3) கூரை 4) மரம்

03. "குமார் ஆசையாகப் படித்தான்" இங்கு ஆசை என்பதன் எதிர்க்கருத்து கருத்து?
1) நிராசை 2) பேராசை 3) வெறுப்பு 4) கவனம்

04. "அரசன் நீதி தவறாதவன்" இங்கு நீதி என்பதன் எதிர்கருத்து?
1) அறம் 2) அநீதி 3 சட்டம் 4) கடமை

05. உயிர்குறில் எழுத்துக்கள் எத்தனை?
1) 12 2) 5 3) 7 4) 247

06. இவற்றுள் ஆய்த எழுத்து எது?
1) ஔ 2) ஐ 3) க் 4) ஃ

07. மெல்லின எழுத்துக்கள் எவை?
1) க், ச், ட், த் ,ப், ற் 2) அ, இ, உ, எ, ஒ
3) ய், ர், ல், வ், ழ், ள் 4) ங், ஞ், ண், ந், ம், ன்

08. இவற்றுள் வினை முற்று எது?
1) அம்மா 2) வந்த 3) வந்தாள் 4) பூ

09. குமார் தனது நண்பனான ரவியைச் சந்தித்தான் இங்கு எழுவாய் எது?
1) குமார் 2) நண்பன் 3) ரவி 4) சந்தித்தான்

10. "நான் மாலை சுடச்சுட வடை உண்டேன்." இங்கு செயற்படுபொருள் எது?
1) நாள் 2) மாலை 3) உண்டேன் 4) வடை

11. இவற்றுள் உயர்திணை எது?
1) பறவை 2) மரம் 3) ஆசிரியர் 4) கல்

12. இவற்றுள் பலர்பால் எது?
1) பறந்தன 2) அவர்கள் 3) நீ 4) குமார்

13. முன்னிலைச் சொல் எது?
1) நான் 2) நீ 3) அவள் 4) குமார்

14. எதிர்காலத்தை குறிக்கும் வினைச்சொல் எது?
1) பறக்கும் 2) விழுந்தாள் 3) நடக்கிறான் 4) படித்தாள்

15. "!" இந்த நிறுத்தற்குறி குறிப்பது?
1) முற்றுப்புள்ளி 2) வினாக்குறி 3) வியப்புக்குறி 4) காற்புள்ளி

(15x2 =30 புள்ளிகள்)



Scanned by CamScanner

## பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**01. நீங்கள் வகுப்பறையில் தமிழ்ப்பாடம் தொடர்பாக மேற்கொண்ட "பேச்சு" கணிப்பீட்டை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) பேச்சின் தலைப்பு யாது?

2) ஆசிரியர் கூறிய ஆலோசனைனகள் 02 தருக?

3) உமக்கு புள்ளிகள் வழங்கப்பட்ட நியதிகள் 02 தருக?

4) பேச்சுக் கணிப்பீட்டிற்கு வேண்டிய தகவல்களை எவ்வாறு பெற்றீர்கள்?

5) இக் கணிப்பீட்டால் நீங்கள் பெற்ற நன்மைகள் 02 தருக? (10 புள்ளிகள்)

**02. பின்வரும் தலைப்பினுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 100 - 150 சொற்களில் கட்டுரை ஒன்று வரைக.**

அ) சூழலைப் பாதுகாப்போம்

ஆ) நான் விரும்பும் பெரியார்

இ) நான் வைத்தியரானால்

ஈ) கிழிந்த சப்பாத்தின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

**03. உமது பிறந்த நாள் கொண்டாடத்திற்கு உமது நண்பனை / நண்பியை வருமாறு அழைத்து 50 சொற்களில் கடிதம் ஒன்று வரைக**

(15 புள்ளிகள்)

**04. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.**

1. இரை -
   இறை -

2. கரை -
   கறை -

3. வழி -
   வளி -

4. மரை -
   மறை -

5. மலை -
   மழை -

(5x2 = 10 புள்ளிகள்)

**05. சுருக்கமான விடை தருக.**

அ) ஈ.: பண்டியின் குணவியல்புகளை குறிப்பிடுக?

ஆ) சேய் எலி கூறும் சேவலின் தோற்றம் யாது?

இ) உடல் வளர்ச்சிக்குத் தேவையான போசனைக் கூறுகள் எவை?

ஈ) மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகிறது?

உ) நாயின் திட்டம் என்ன?

(5x3=15 புள்ளிகள்)



Scanned by CamScanner